1979 ஏப்ரல் 26]

காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் துணைத் தொழிற்சாலை.

* வினா எண். 840— திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் டான்சி நிறுவனத்தின் துணைத்தொழிற்சாலை அமைக்கும் வேலை எப்போது துவங்கப்பட்டது?

(ஆ) அந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தற்போது கிண்டியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் டான்சியின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு மோபட்ஸ்க்காக காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மறைமலை நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைக்கான கட்டுமான வேலைகள் 1979-ம் வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) தொழிற்கூடத்தின் புறச்சுவர்கள் கதவு மேல்மட்டத்திற்குச் சரியாக எழுப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள வேலைகள் இவ்வாண்டு ஜூன் மாதம் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : டான்சி நிறுவனத்தின் துணைத் தொழிலகங்கள் தமிழகம் முழுவதும் எத்தனை ஒன்றியங்களில் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்வி டான்சி நிறுவனத்தின் துணைத் தொழில்கள் காட்டாங்குளத்தூரில் அமைப்பது பற்றியதாகும். அது சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்கும்போதே நினைத்தேன். காட்டாங்குளத்தூர் பகுதியில் துணைத் தொழில்கள் நிறுவப்படுவதைப் பற்றிய மூலக் கேள்வியில் அது குறித்த துணைக் கேள்வியைக் கேட்காமல் வேறு எங்கோ உறுப்பினர் செல்லுகிறார்.

ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவுச் சங்கங்கள்.

* வினா எண். 841— திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கிவரும் ஆட்டோ சர்வீசிங் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அரசு துறையைச் சேர்ந்த வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு மேற்படி சங்கங்களுக்கு அனுப்பப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஒன்பது.

(இ) இல்லை.

திரு. இ. தமிழரசன் : ஒன்பது இடங்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதைத் தவிர மாவட்டம் மற்றும் தாலுகா தலைநகரங்களில் வாகனங்கள் அதிகமாக இருக்கும் இடங்களில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் இதைப்போன்ற சங்கங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த ஆட்டோ செர்வீசிங் கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய அரசின் அரை லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பிக்கப்பட்ட இடங்களில் போதுமான அளவு உற்சாகத்தோடு இதிலுள்ள உறுப்பினர்கள் பணியாற்றி வர வில்லை என்ற காரணத்தால் பல இடங்களில் பணி மையங்கள் சிறப்பாகச் செயல்படவில்லை. இப்போதுதான் அவை சிறப்பாகச் செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஒன்பது இடங்களிலும் வெற்றிகரமாக நடத்தினால் பிறகு ஒவ்வொரு மாவட்டத்தின் முக்கிய பகுதிகளிலும் இந்த அமைப்புகளை ஏற்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : அரசுத் துறையைச் சார்ந்த வாகனங்கள் பழுது பார்க்க தனியாரிடத்தில் செல்லக்கூடிய காரணத்தால் பல தவறுகள் ஏற்படுகின்றன என்பது அரசு அறியுமா? அதிலிருந்து விடுபடக்கூடிய வகையில் அரசு வாகனங் களை அரசே இயக்கும்படியான பணிமனைகளில் பழுது பார்க்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த ஒன்பது ஆட்டோ செர்விஸ் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் அரசுத் துறை வாகனங்களை ரிப்பேர் செய்ய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. மற்றப்படி வேறு எங்கெங்கே ரிப்பேர் செய் கிறார்கள் என்பது இந்தத் துறைக்கு உட்பட்ட கேள்வி அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : இதிலே வட ஆற்காடு மாவட்டம் விடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கும் இதை எக்ஸ்டெண்ட் செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தொடங்கப்பட்டது அல்ல. ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தை விட்டிருக்கிறார்கள். நான் முதலிலேயே

1979 ஏப்ரல் 26]

கூறியபடி ஒன்பது பணி தொழில் கூட்டுறவுச் சங்கங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திவிட்டபிறகு மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுவர பரிசீலனை செய்யும்போது வட ஆற்காடு மாவட்டத்திற்கு முன்னுரிமை—'பஸ்ட் பிரிபரன்ஸ்' கொடுக்கப் படும்.

சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனை

* வினா எண். 842—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேரன்மாதேவி அரசினர் மருத்துவமனையை விரிவாக்குவது குறித்து அரசிற்கு மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து மதிப்பீடு வந்துள்ளதா?

(ஆ) அப்படியானால் எவ்வளவு?

(இ) எப்போது விரிவாக்கல் பணிகள் ஆரம்பித்து முடிவடையும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ), (ஆ) & (இ) : இம்மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் கட்ட 1979—80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி புதிய பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தப் பெரியார் நூற்றாண்டு விழாவில் சேரன்மாதேவியைத் தாலுகாவாக மாற்ற வருவாய்த் துறை அமைச்சரும், புரட்சித் தலைவரும் அறிவித்திருக்கிறார்கள். திராவிட சமுதாயத்தின் பெயர்பெற்ற சேரன்மாதேவி தாலுகா ஆகின்ற நேரத்தில் அந்த மருத்துவமனையை தாலுகா மருத்துவமனை அளவுக்கு உயர்த்த அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 6 படுக்கை வசதிகள் கொண்ட அந்த மருத்துவ மனை தற்போது இன்னும் நிறையப் படுக்கை வசதிகள் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு 20 படுக்கை வசதிகளைச் செய்ய, பிரசவப் பிரிவு, அறுவை அரங்கம் இவைகளை வைத்து சுமார் 2 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்று 1979—80 ஆம் ஆண்டில் 2-வது பிரிவுத் திட்டமாக செய்யப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இயக்குநரிடமிருந்து வரைபடம், மதிப்பீடுகள் இவைகளைப் பெற்று அதற்கு ஒப்புதல் வழங்கப்படும். படிப்படியாக இந்த மருத்துவ மனையின் தரம் உயர்த்தப்படும்.